# <u>கல்வி அமைச்சு</u>

இலங்கை அதிபர் சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்வதற்கான இயலளவு விருத்திப் பயிற்சிப் பாடநெறி - 02

## விண்ணப்பம் கோரல்

அதிபர் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள அல்லது தரம் II இற்கு பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்கு அவசியமான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

**<u>விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்</u>**

1. இலங்கை அதிபர் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்ற/ நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

**<u>அல்லது</u>**

தரம் II இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்வதற்கு அவசியமான **<u>அனைத்து</u>** தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

2. தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

**முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக கல்வி அமைச்சின் மனித வள அபிவிருத்திக் கிளைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**

★ பயிற்சிப் பாடநெறிக்கு அழைப்பு விடுக்கும் போது பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்காக காலத்தை தாண்டியுள்ள அல்லது அண்மித்துள்ள அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024/02/26**